# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, THOOTHUKUDI.

Calendar ...
Miscellaneous (Chapte... } DEPOSITION OF WITNESS
Preliminary Register ... SC. Case No. 41/2019
Sessions ...

Deposition of witness for { Prosecution - P.W. 4
Defence
Court

Name மாணிக்கதுரை

Father's Name

Village

Taluk

Caste

Calling

Religion

Age

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 28/02/2019.

**முதல் விசாரணை:**

எனக்கு சொந்த ஊர் நெற்கட்டும் சேவலுார் அருகில் உள்ள கூடலுார். எனது வேலை நிமித்தமாக கோவில்பட்டியில் குடியிருந்து கறிக்கடையில் வேலை செய்கிறேன். ஆஜர் எதிரியை தெரியும். சமுத்திரத்தை வெட்டிய அன்று பார்த்தேன். இன்னொருவர் பெயர் ஆப் ஆயில் ஆறுமுகம். அவர் குடியிருக்கும் ஏரியாவில் தான் நான் கறிக்கடை வைத்திருக்கிறேன். இந்த வழக்கின் 2ம் சாட்சி சமுத்திரத்தை தெரியும். 06.01.2014ம் தேதி கோவில்பட்டியிலிருந்து பாதயாத்திரையாக திருச்செந்துாருக்கு நாங்கள் சுமார் 10 பேர் சென்றோம். அப்போது சாயங்காலம் 03.30 லிருந்து 04.00 மணிக்குள் இருக்கும் நாங்கள் தட்டாம்பாறை தாண்டி உள்ள கல்குவாரி அருகே நாங்கள் வந்து

கொண்டிருக்கும்போது அப்போது ஒரு ஸ்பிளண்டர் ப்ளஸ் பைக் நம்பர் பிளேட்டில் பசும்பொன் என்று எழுதப்பட்டிருந்தது அதில் ஆறுமுகம், ஆஜர் எதிரியும் வந்தார்கள். இரண்டு பேரும் கையில் துணிச்சுற்றிய அரிவாளுடன் வந்தார்கள். பைக்கில் வந்து அந்த இடத்தில் நின்று துணியை பிரித்து அரிவாளை எடுத்து சமுத்திரத்தை வெட்ட வந்தார்கள் சமுத்திரம் தடுக்க முற்பட்ட போது அவரை அருகில் இருந்த முட்செடியின் மீது தள்ளி இரண்டு பேரும் மாறி மாறி வெட்டினார்கள். ஆறுமுகம் பாக்கெட் சைஸ் அரிவாள் வைத்திருந்தார். என்னிடம் காட்டப்படுவது தான் அது.அது சா.பொ 1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. ஆஜர் எதிரி கோழிவால் அரிவாள் வைத்திருந்தார். என்னிடம் காட்டப்படுவது தான் அது.அது சா.பொ 2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. சமுத்திரம் ஓடி விட கூடாது என்று முதலில் ஆறுமுகம் சமுத்திரத்தின் வலது காலில் கணுக்காலுக்கு மேல் வெட்டினார். அவ்வாறு வெட்டியவுடன் சமுத்திரம் கீழே விழுந்தார். உடனே இரண்டு பேரும் மாறி மாறி வெட்டினார்கள். தலையில் நிறைய வெட்டு வெட்டினார்கள் கை, கால் , ஆகிய பகுதிகளில் மாறி மாறி வெட்டினார்கள். நாங்கள் சமுத்திரத்தை காப்பாற்ற வருவதற்குள் பைக்கை ஸ்டார்ட் பண்ணி எதிரிகள் இருவரும் ஓடி விட்டார்கள். நான் சமுத்திரத்திற்கு பின்னாடி ஒரு 100 மீ தொலைவில் வந்து கொண்டிருந்தேன். சமுத்திரம் கூட கணேசன் வந்து கொண்டிருந்தார். சமுத்திரத்தை வெட்டி விட்டு அவன் செடிக்குள் விழுந்தவுடன் பைக் ரன்னிங்கில் இருந்தது அதை ஸ்டார்ட் பண்ணிவிட்டு அப்படியே ஓடிவிட்டார்கள். நாங்கள் ஓடிவருவதற்குள் இருவரும் சமுத்திரத்தை வெட்டிவிட்டார்கள். நாங்கள் வந்து 108 ஆம்புலன்ஸ்க்கு போன் பண்ணிவிட்டு அது வர நேரம் ஆகும் என்பதால் நாங்கள் கொண்டு வந்த ஆட்டோவில் சமுத்திரத்தை ஏற்றி போய்க்கொண்டிருக்கும்போது எதிர்தார் போல் 108

வந்துவிட்டது அதில் ஏற்றி அவரை அரசு மருத்துவமனையில் கொண்டு போய் சேர்த்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

கு.வி:இல்லை